

தேசபாரதி தீவகம் வே .இராஜலிங்கம் கவிதைகள் !

Written by - தசேபாரதி தீவகம் வே.இராஜலிங்கம் -
Monday, 04 December 2017 18:11 - Last Updated Monday, 04 December 2017 18:16

1. நினைக்கின்றோம் இதுநாள் !

கார்முகிலின் கார்த்திகையிற் கஞ்சநிமிர் வஞ்சிநிலம்
கற்பனெவே பறெ்ற குரலாய்
பரோ் அனயை வஞெ்சுருளில் வீழ்ந்துவி;டச் சொந்தமொடு
பொங்கிவருந் தீயின் அலயைாய்
ஊர் உலகம் பார்த்துறவே ஓலமுடன் வீழ்சடலம்
உள்ளதனை உப்பும் நினவைாய்
மார் அடித்து வாதயைுற மன்றுருக யாம்பதறி
வதைத்துஅழு கின்றமோ் அறிவீர் !

நீள்மடியில் ஓர்கணமும் நஞெ்சுருகும் வஞ்சநிலை
நீதியனெுஞ் சார்பு நிலயைில்
கோள்பரவ நின்றதி(ல்)லை க�டியொரு வாழ்வுடனார்
கொஞ்சுமுல காற்றும் படியே
தாள்பரவ வள்ளுவனார் சாற்றிவிடும் மன்நறெியில்
தங்கநிறை கொண்ட இனமாய்
ஏழ்உலகும் வார்ப்படெுத்து இன்னுருவாய் நீதிநறெி
இட்டுவலங் கொண்டார் இதுநாள் !

ஏறியுயிர் குண்டழுத்தி ஏகமுடன் பரோ்வழுதி
இன்னுயிரும் பனோ தறிவமோ்
காறியுமிழ் கின்றதொரு கஞ்சலனெப் பயோகலாக்
கண்ணியமுங் கண்டு மகிழ்ந்தமோ் !
ஊறுசயெ நின்றதிலை உண்மயைனெப் பறோற்றுமொரு
உள்ளஇனங் காண விளநை்தமோ் !
சாறுமொரு வாகநைிலச் சத்தியமும் வழுவாத
சாகரமாய் எல்லவரும் வாழ நினதை்தமோ் !

தன்மனது தானறியதத் தற்கொடயைிற் சநெ்தணலின்
தங்கமனெத் தன்னை எரித்தார் !
நன்மனது கொண்டுதமிழ் நட்புஎனும் சிங்களமும்

1 / 4

தேசபாரதி தீவகம் வே .இராஜலிங்கம் கவிதைகள் !

Written by - தேசபாரதி தீவகம் வே.இராஜலிங்கம் -
Monday, 04 December 2017 18:11 - Last Updated Monday, 04 December 2017 18:16

நட்டுவிட எண்ணிச் சிறந்தார்!
தொன்றுதொடக் கொன்றுவிடும் துரத்தாடிப் பறிப்பாராய்த்
தொல்லரசங் கொண்ட சரிதம்
இன்றுவரை எரிகின்றோம் என்பதினால் நீ திதனில்
நெறியாக வில்லை இடரே!

தமிழாகி எரிந்தோரைத் தாம்தொழுது கொண்டகவித்
தனையாகப் பெற்ற மகர்க்கு
அமிழ்தாகி மண்வழுதி ஆக்குமுயிர்ச் செங்குருதி
ஆற்றியவர் நெஞ்சந் தமக்கு
இமையாகி மின்நெடிய இனமானத் தென்னுமுயிர்
ஏற்புரையும் போற்றும் அவியாய்
அமைவாக மன்பதையில் ஆகுபலி கொண்டவரை
அள்ளிநினைக் கின்றோம் இதுநாள்!

2. பிரான்ஸ் பயணம் ...ஒருபிரார்த்தனை

எண்ணும் போதும் இயற்றும் போதும்
எண்ணுவதெம் தமிழே
மண்ணின் பாட்டு விண்ணும் உருக
வகுத்திடுமெம் தமிழே
கண்ணிற் காணும் காந்தக் கருவம்
கற்பனையெம் தமிழே
நண்ணிற் சுரக்கும் நறுந்தேனமுதம்
நயக்குமாம் எம் தமிழே!

பிரான்சு நாட்டிற் புகுந்தேன் மரபுப்
பொற்தாமரைக்கண்
தராதரங்கள் சங்கம் உரைத்த
தண்தமிழார் நூல்கள்
பிரார்த்தனைக்கூட் புகலுங் காலைப்
பொன்னெழுத்தாம் அறிவீர்
பராபரத்தெம் இறைவன் பகர்ந்த
பைந்தமிழாம் அறிவீர்!

தேவன் அழைப்பிற் சென்றோம் அந்நாட்
செந்தமிழ்ப்பா வரங்கம்
ஆவல் மிகுந்த அமுதக் குழும்பாய்
அசத்தியதாங் கண்டீர்
காவில் மரபுக் கழலே அறத்தின்
காட்சியென்றா னதுவாய்

2 / 4

தேசபாரதி தீவகம் வே .இராஜலிங்கம் கவிதைகள் !

Written by - தேசபாரதி தீவகம் வே.இராஜலிங்கம் -
Monday, 04 December 2017 18:11 - Last Updated Monday, 04 December 2017 18:16

ஓவியம்போல் ஒருங்கே இணைப்பின்
உற்சவமானதுவே!

பாடசாலதைரும் பழம்மாணாக்கர்
பிரெஞ்நாட்டுப் புலத்தே
கூடவே லணையின் கொண்டு மயங்கக்
கூத்தொடுமாஞு் சுனையில்
ஆடல் பாடல் அலையுங் கலையுமாய்
அற்புதமாம் பொழுதில்
தேடல் நடத்தித் திளையோர் மயங்கத்
திருவிழாவானதுவே!

மானக் கருக்கல் மகிழக் கருவாய்
மன்றத்தேயழகாய்
தேனப் பொடிசூழ் திகழுங் காவிற்
தனென்னருங்காப்பியமாய்
ஆனமருங்கில் அவிழுங் குளிரின்
அற்புதமாந் தளிராய்
கானம் இறுகக் கன்னித் தமிழாள்
கண்டனள்வீ றாமே!

---

3. அவளும் நானும் ..

அவளே உவப்பன் அவளே களிப்பன்
அவளே எனக்கென்குந்
தவப்பெண் எனவே தருமாம் இறவைத்
தகப்பன் தந்ததுவாய்
சிவப்பண் உரகைக்குந் திறம்பேர் உருவாய்த்
துடிக்கும் பேரவளாய்
பவளக் கனிவாய்ப் பதிப்பார் வதியாய்ப்
பகன்றார் எந்தனுக்கே!

கோபம் வளருங் குறைகாண் பவளுங்
கொடுத்த மதிப்பேடு
ஆபத் தனியான அளந்தே னிலையாம்
அவளே சிலநேரம்
தீ பக் கணையாய்த் தனையாள் அரசித்
துணையாய் எடுத்தாளும்
தாபக் கரங்கள் தகையாய் மாறுந்
தகருங் கணைகளுமே!

எனையாள் உருவிற் றனையான் வருத்தும்

3 / 4

தேசபாரதி தீவகம் வே .இராஜலிங்கம் கவிதைகள் !

Written by - தேசபாரதி தீவகம் வே.இராஜலிங்கம் -
Monday, 04 December 2017 18:11 - Last Updated Monday, 04 December 2017 18:16

இடர்கள் தன்னரோடும்
வினையாய்க் கருதி எதிர்மா விளக்கம்
எடுத்தே சலியாது
அனைத்துப் பணமும் அதற்குத் தனைநா
அளிக்கும் அடைமானம்
நினைப்பா ருலகில் நின்றே நெறியில்
நிகழ்ந்தா ரென்தனுக்கே!

தாயர் மகிழ்ந்தார் தந்தையார் மகிழ்ந்தார்
தனையாள் அன்புடனே
சேயர் மகிழ்ந்தார் தெளிவாய்;த் துன்பம்
துடைத்தார் மதியுடனாம்
ஆயர் எனவே அகலக் கால்வாய்
அதளத் தறைவித்துத்
த□யர் விளங்கத் துணையாய்த் திகழ்ந்தார்
தெப்பக் கருங்கடலே!

உதவிக் கரங்கள் தனையும் மறந்து
ஒளிப்பார்ப் பேருலகில்
எதையும் தனக்காய் யுருகாப் படியாய்
எனக்காய் உழைத்தவளாம்
சிதையில் வளரும் நினைவாய் யான்என்
சிந்தை யுடையவனாம்!
புதையற் பெண்ணாள் பேசா மலர்க்கண்
பொன்னே அவள்தானே!

Rajalingam Velauthar: vela.rajalingam@gmail.com

4 / 4